# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8073037

C

02/2019/AC/CB

1. District : Coimbatore PS: V & AC Year: 2019 FIR No.: Date: 09.01.2019
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a) and 12
(ii) Act சட்டம்: as amended by Prevention of Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.12.2018 Date to : 08.01.2019
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.00 hrs Time to : 17.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 08.01.2019 Time : 19.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 08.01.2019 Time : 19.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer-typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South East about 4 Km
Beat Number : — (b) Address : O/o Coimbatore Housing Unit, Tamil Nadu Housing Board, Tatabad, Coimbatore.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. K. Vijayakumar (b) Father's/ Husband's Name : Krishnasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 59/2019 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : No. 103 E, Kothakadu, 63-Velampalayam, Tiruppur.
தொழில் Electronic Service முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tr. Mohan, Manager Marketing Service (MMS), O/o Coimbatore Housing Unit, TNHB, Tatabad, Coimbatore.
(2) Tr. Dhandapani, Clerk, O/o Coimbatore Housing Unit, TNHB, Tatabad, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
9.1.19

15. Date & Time of despatch to the court: 09.01.2019.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
9.1.2019

Name: பெயர் M. Vijayalakshmi
Rank: நிலை .....................No. எண் .........
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Coimbatore.

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2019/ AC/CB, U/s 7 (a) & 12 of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி**

08.01.2019 ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 1900 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது S.K.விஜயகுமார், வயது 59,த/பெ கிருஷ்ணசாமி,க.எண். 103 E , கொத்துக்காடு, 63- வேலம்பாளையம், திருப்பூர் என்பவர் கணிணியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் M.M.S திரு.மோகன் மற்றும் கிளார்க் திரு. தண்டபாணி ஆகியோர்கள் விற்பனை பத்திரத்தை வழங்குவதற்கு லஞ்சமாக பணம் கேட்டது தெரிய வந்தது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளபட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரிய வந்ததால், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநகரத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 09.01.2019 ம் தேதி காலை 0800 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண். 2/2019/AC/CB, U/s 7 (a) & 12 of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: 08.01.2019 அனுப்புநர்: S.K.விஜயகுமார், வயது59, த/பெகிருஷ்ணசாமி, க.எண். 103 E , கொத்துக்காடு,63- வேலம்பாளையம், திருப்பூர். பெறுநர்: உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். நான் திருப்பூர்,63- வேலம்பாளையம், கொத்துக்காட்டில், கதவு எண் 103 ல் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் எலக்ட்ரானிக்ஸ் சம்மந்தப்பட்ட பொருட்கள் டிவி, ரேடியோ ஆகியவற்றை சர்வீஸ் செய்து வருகிறேன். எனக்கு கோபால் மற்றும் பிரபு ஆகிய இரண்டு மகன்கள் இருந்தார்கள். எனது மூத்த மகன் கோபால் பெயரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் திருப்பூர் முதலிபாளையம் என்ற இடத்தில் கடந்த 2004 ஆம்

ஆண்டு இரண்டு வீட்டு மனைகள் EWS A 6579 மற்றும் 6580 தலா முக்கால் சென்ட் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி இரண்டு மனைக்கு கோவை டாடாபாத் ஹவுசிங் போர்டு அலுவலகத்தில் பணம் முழுவதும் செலுத்தி கடந்த 21.12.2017- ல் அதற்குண்டான இரண்டு விற்பனை பத்திரங்கள் பெற்றோம். மேற்படி பத்திரங்களை திருப்பூர் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு முன்பே எனது மகன் கோபால் 1.1.2018 ஆம் தேதி இறந்து விட்டார். எனவே என் மகன் கோபால் பெயரில் இருந்த மேற்படி சொத்தை எனது பெயருக்கு மாற்றி விற்பனை பத்திரம் பெறுவதற்கு கோவை டாடாபாத் ஹவுசிங் போர்டு அலுவலகத்தில் திருப்பூர் முதலிபாளையம் சம்மந்தப்பட்ட பணிகளை பார்க்கும் கிளர்க் தண்டபாணி என்பவரை விசாரித்தேன். அவர் எனது ஆதார்கார்டு, மேற்படி மனைக்கு பணம் செலுத்தியதற்கான ரசீது, மகன் கோபால் பெயரில் இருந்த விற்பனை பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வர சொன்னார். மேலும் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பம் கொடுக்க சொன்னார். அதன்படி நான் 30.11.2018-ம் தேதி மேற்படி ஆவணங்களுடன் விண்ணப்பம் கொடுத்தேன். தண்டபாணி என்னை சுமார் இரண்டு நாட்கள் கழித்து வரசொன்னார். நான் 03.12.2018-ம் தேதி சுமார் 11 மணியளவில் கோவை டாடாபாத் ஹவுசிங் போர்டு அலுவலகம் வந்து தண்டபாணியை பார்த்து என் பெயருக்கு விற்பனை பத்திரம் மாற்றி தர ஏற்பாடு செய்யும்படி கேட்டேன். அதற்கு அவர் இவ்வலுவலகத்தில் உள்ள M.M.S அவர்களுக்கும் திருப்பூர் முதலிபாளையம் பகுதியை பார்த்து வரும் கண்காணிப்பாளர் திருமதி.மணிமேகலை அவர்களுக்கும் இரண்டு பத்திரத்திற்கும் சேர்த்து ஒவ்வொருவருக்கும் தனியாக ரூ.5000/- வீதம் ஆக மொத்தம் ரூ.10,000/- கொடுக்க வேண்டியிருக்கும் என்று கூறினார். நானும் எப்படியாவது வேலை ஆக வேண்டும் என்பதால் சரி என்று சொல்லி விட்டேன். வெளியே வந்து விசாரித்தபோது M.M.S.ன் பெயர் திரு.மோகன் என்று தெரிந்து கொண்டேன். நான் தொடர்ந்து சுமார் ஒரு மாதமாக கோவை டாடாபாத் ஹவுசிங் போர்டு அலுவலகம் சென்று என் பெயருக்கு பத்திரம் மாற்றுவது சம்பந்தமாக தண்டபாணி திருமதி.மணிமேகலை மற்றும் M.M.S திரு.மோகன் அவர்களை சந்தித்து அவர்கள் கேட்கும் ஆவணங்களை கொடுத்தேன். மேலும் பெயர் மாற்றுவதற்கான தொகை ஒரு சைட்டிற்க்கு ரூபாய் 1200/-வீதம் இரண்டு சைட்டிற்க்கும் ரூபாய் 2400/-செலுத்தி ரசீது பெற்றேன். மேலும் அவர்கள் அறிவுறுத்தியதன பேரில் பத்திரம் பெற தலா ரூ.700/- க்கான ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி கொடுத்தேன். தொடர்ந்து திருப்பூரிலிருந்து கோவை வர எனக்கு சிரமமாக இருந்ததால் கடந்த 02.1.2019-ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் தண்டபாணி அவர்களை சந்தித்து விரைவில் விற்பனை பத்திரம் ஏற்பாடு செய்துதரும்படி கேட்டேன். அதற்கு

அவர் கண்காணிப்பாளர் மணிமேகலை மற்றும் M.M.S திரு.மோகன் அவர்களுக்கும் தனித்தனியாக ரூ.5000/-கொடுத்து கவனித்தால்தான் உங்களுக்கு விரைவில் விற்பனை பத்திரம் வழங்குவார்கள் என்று சொன்னார். நானும் பார்க்கலாம் என்று சொன்னேன். இன்று 08.01.2019 ஆம் தேதி காலை சுமார் 11 மணியளவில் கோவை டாடாபாத் ஹவுசிங் போர்டு அலுவலகம் சென்று தண்டபாணி அவர்களை சந்தித்து விற்பனை பத்திரம் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அவர் எனக்கு பெயர் மாற்றும் சான்றிதழ் வழங்கினார். மேலும் சேல்டீடுக்கான டிராப்ட் தயார் செய்து M.M.S மற்றும் மணிமேகலையிடம் காண்பித்து தருவதாக என்னிடம் கூறினார். அப்போது அவர் M.M.S அவர்களுக்கும் மணிமேகலை அவர்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 5000/- கொடுத்தால்தான் பத்திரம் கொடுப்பார்கள் என்று சொன்னார். அதற்கு நான் என்னுடைய தொழில் மிகவும் நலிவடைந்து கஷ்டத்தில் இருக்கிறேன் என்னால் அவ்வளவு பணம் ரெடி செய்ய முடியாது என்றும் குறைத்து கொள்ளுங்கள் என்றும் கேட்ட போது அப்படியென்றால் நீங்களே MMS அவர்களை நேரில் சென்று பார்த்து பேசிவிட்டு முடிவு செய்து கொள்ளுங்கள் என்று கூறினார். அதன் படி நான் மாலை சுமார் 5.00 மணியளவில் M.M.S. திரு.மோகன் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து கிளார்க் தண்டபாணி விற்பனை பத்திரம் தயார் செய்வதற்காக தங்களுக்காக பணம் தனியாக ரூ.5,000/- கேட்ட விபரத்தை கூறியும் என் கஷ்டத்தை சொல்லியும் மேற்படி தொகையை குறைத்து கொள்ளும்படி கேட்டபோது அவர் தங்களையே பார்த்து தொகை பற்றி பேசி கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்த விபரத்தை சொன்னேன். அதற்கு திரு.மோகன் அவர்கள் தண்டபாணி என்னிடமே பணம் பற்றி கேட்டு கொள்ள சொல்லி விட்டாரா என்று கேட்டு விட்டு சிறிது யோசித்து இரண்டு பத்திரத்திற்கும் சேர்த்து ரூ.3000/-ஐ கொடுங்கள் என்றும் நான் அதிகமாக கேட்கவில்லை என்றும் பணம் ரூ.3000/- ஐ மட்டும் கொடுங்கள் என்றும் சொல்லி பத்திரம் எப்போது டைப் செய்ய கொடுக்க போகிறீர்கள் என்று கேட்டார். நான் நாளை பத்திரத்தை ரெடி செய்து விடுவேன் என்று கூறினேன். அப்போது அவர் பத்திரத்தை ரெடி செய்து கொடுங்கள். அதன் பின்பு பணத்தை கொடுத்து விட்டு பத்திரத்தை பெற்று கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார். நானும் சரி நாளை வருகிறேன் என்று சொல்லி வெளியில் வந்தேன். அப்போது அங்கிருந்த கிளார்க் தண்டபாணி என்னிடம் M.M.S எவ்வளவு கேட்டார் என்று விசாரித்தார். நான் அவர் ரூ.3000/- கேட்ட விபரத்தை கூறி பத்திரத்தை நாளை ரெடி செய்து வர சொல்லியுள்ளார் என்று சொன்னேன். அப்போது அவர் MMS அவர்களுக்கு பணம் ரூ.3000/- கொடுப்பது

போல் கண்காணிப்பாளர் திருமதி.மணிமேகலை அவர்களுக்கும் அதே தொகையை கொடுக்க வேண்டும் எனவும் இல்லையென்றால் சங்கடம் ஏற்படும் என்றும் உங்களுக்கு எளிதாக வேலை முடிய வேண்டுமென்றால் மேற்படி தொகையை கொடுக்க வேண்டுமென்றும் கண்டிப்பாக கூறிவிட்டு என்னிடம் பத்திரம் தயார் செய்வதற்கான மாதிரி விற்பனை பத்திரத்தையும், ஏற்கனவே அவரிடம் கொடுத்திருந்த இரண்டு ஸ்டாம்ப் பேப்பர்களையும் என்னிடம் கொடுத்து அலுவலகத்தின் எதிரில் உள்ள மாதா ஜெராக்ஸ் கடையில் கொடுத்து தயார் செய்யும்படியும் நாளை பத்திரம் பதிவு செய்ய கொடுத்து விடுவார்கள் என்றும் சொன்னார். அதன்படி நானும் மேற்படி கடையில் கொடுத்து விட்டு வந்தேன். மேலும் மேற்படி இரண்டு மனை சம்மந்தமாக கட்டணம் தலா ரூ.178/-ஐ நாளை மேற்படி அலுவலகத்தில் செலுத்தும்படி கூறி இரண்டு சீட்டுகள் வழங்கினார். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் இறந்துபோன எனது மகன் கோபால் பெயரில் உள்ள வீட்டு மனைகளை எனது பெயருக்கு மாற்றி, பத்திரத்தை பெற மேற்படி M.M.S. திரு.மோகன் அவர்களுக்கும், திரு.தண்டபாணி சொன்னதை போல் கண்காணிப்பாளர் திருமதி.மணிமேகலை அவர்களுக்கும் தலா ரூ.3000/-ஐ லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே மேற்படி இரண்டு விற்பனை பத்திரத்தை வழங்குவதற்கு லஞ்ச தொகையை கேட்ட M.M.S.திரு.மோகன் என்பவர் மீதும் கண்காணிப்பாளர் திருமதி.மணிமேகலை என்பவருக்கு கொடுப்பதற்காக வேண்டி லஞ்சம் கேட்ட திரு.தண்டபாணி என்பவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) S.K.விஜயகுமார்,08.01.2019.முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(ம.விஜயலட்சுமி) 9-1-2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.